# “குரு பத்தியே சித்திக்கு வழி ”



**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறூர்**
**அவர்கள் அருளிய**

# இந்து வேதம்

தமிழர்களின் இந்து வேத மதமான இந்து மதம்

**வைகாசி மாதம்** (June 2016)

**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,117**

காணிக்கை: ரூ.10 /-

# உள்ளுறை

1. குரு பத்தியே சித்திக்கு வழி.
2. மதவழிப் புரட்சிக்கு தேவதேவியின் பரிந்துரை.
3. பேரின்பமும் சிற்றின்பமும்.
4. குரு - அரச - இலக்கிய பாரம்பரியங்களின் தத்துவம்.

**"இருள்சேர் உலகின் இன்னல்கள் அகற்றி அருள்சேர் உலகடைத லரிது."**

- குருபாரம்பரிய குறட்பா.

# “குரு பத்தியே சித்திக்கு வழி ”

**(தொகுத்து வழங்குபவர்: பரமாச்சாரியார் நெ.சேவுகன்)**

ஒவ்வொரு அடியானும் சிறந்த அருளாளராக மாற முழுமையாகக் குருவழி பின்பற்றி ஒழுகுதலே சிறந்த வழியாகும். குருதேவர் அவர்கள் அவ்வப்போது அடியேனுக்கு உபதேசித்த, அருளிய அருள்மொழி வாசகங்களே இங்கு திருமந்திற ஓலை நாயகத்தின் அறிவிப்பாக அனைவருக்கும் அறிவிக்கப் படுகிறது. தொடர்ந்து இத்தலைப்பில் கட்டுரைகளும், விளக்கங்களும் வெளியிடப்படும். இதைப் படிக்கும் அடியான், அடியாள், அடியார் .... அனைவரும் பத்தி, சத்தி, சித்தி, முத்தி நிலைகளில் உயர்வர்.

“**சித்தன் போக்கு சிவன் போக்கு**” என்ற முதுமொழி. சித்தர்கள் வழியிலேயே முழுமுதற் பரம்பொருளும் செயல்படும் என்று விளக்குவதை நாமெல்லாம் உணரவேண்டும்.

“**ஊசி முனையில் நின்று கோடானு கோடிக்காலம் தவமிருந்தாலும், உரிய குருவின்றி எள் முனையளவு பயனும் ஏற்படாது**” என்பதனை ஒவ்வொருவரும் எண்ணியுணர்ந்து தெளிந்து செயல்படவேண்டும்.

பொருளை மனிதன் சம்பாதிக்கலாம். அதுவும் எவரும் எதைச் செய்தாவது எப்படியாவது பொருளீட்ட முடியும். ஆனால், முன்னை ஊழும், பின்னை விதியும், நன்னெஞ்சமும், நம்பிக்கையும், உண்மை நாட்டமும், பணிவும், குருபத்தியுமே அருளை ஈட்டச் செய்வன. நினைத்தவரெல்லாம் அருளீட்ட முடியாது. எவர் எதைச் செய்து எவ்வளவு காலம் முயன்றாலும் அருளைப் பெற்று விட முடியாது; ‘எல்லாம் அவன் செயலே’ என்று இருப்பதே மேல்.

மனிதன் தனியாகப் பிறக்கிறான், தனியாக இறக்கிறான். எனவே, ஒவ்வொரு உயிரும் தான் செய்யும் நன்மை தீமைக்கேற்பவே இறப்புக்குப் பின் வாழ்வும், மறுபிறப்பு வாழ்வும் பெறுகின்றன. இதனை உணர்ந்தால் ஒவ்வொருவர் வாழ்விலும் நோய், பேய், பகை, நகை, நட்பு, அழுகை, இன்பம், துன்பம், வெற்றி, தோல்வி .... முதலியன ஏன் ஏற்படுகின்றன? எப்படி ஏற்படுகின்றன? .... என்பதற்குரிய விடைகள், காரண காரியங்கள் விளங்கிடும். எண்ணெயும், திரியும் விளக்கில் இருந்தாலும் ஏற்றி வைத்திட நெருப்புச் சுடர் வேண்டும் என்பது போல்; எல்லாத் தரமும், திறமும் இருந்தாலும் குருவால் இட்டும், தொட்டும், சுட்டியும் விளக்கப் பெறுவோரே ஞானச்சுடர் பெற்றவராவர். ஞானச்சுடர், சிலருக்குள் அகல் விளக்காக எரிந்திடும், சிலருக்குள் காட்டுத் தீயாக எரிந்திடும், பலருக்குள் மின்மினிப் பூச்சியின் ஒளியாகிடும். ஊனப் பிறவிகள் ஞான நெருப்புக்கு ஈர விறகாக ஆகிடுவார்கள். இவர்களே தெய்வீக நிலைகளை ஏளனம் செய்யவும், எதிர்க்கவும் முற்படுவார்கள். ஈர விறகால் புகைதான் மிகும். இந்த ஈவிரக்கம் அற்றோரால் பகைதான் மிகும்.

குருவின் உடல் தொட்டும், ஆடை தொட்டும், குற்றேவல் பட்டும், ஞானப் பார்வை பட்டும், சொல் கேட்டும் ஐந்து வகையானப் பத்தர்கள் தோன்றுகின்றார்கள். இவர்கள் கடல் மட்டத்தில் நிலவுக் கால இரவுகளில் வாய் திறந்து திரியும் சிப்பிகள், வெறும் பனித் துளிகளை இறைவனின் அன்பளிப்பாகப் பெற்று, அப்படி பனித்துளி பெற்றதும், வாய் மூடி மௌனிகளாகக் கடலின் அடித்தளம் சென்று கண்மூடிக் கடுந்தவம் செய்து, பெற்றிட்ட பனி நீரை ஒளியும், உறுதியும் மிக்க முத்தாக மாற்றிடுவது போலச் செயல்பட்டுப் பதின்மூன்று வகையான அருளாளர்களாக மாறுகிறார்கள். அவர்கள் 1. பத்தர், 2. பத்தியார், 3. புத்தர், 4. புத்தியார், 5. போத்தர், 6.போத்தியார், 7. முத்தர், 8. முத்தியார், 9. சீவன் முத்தர், 10.சீவன் முத்தியார், 11. உருவ சித்தியார், 12. அருவ சித்தியார், 13.அருவுருவ

சித்தியார் எனப்படுவர். இவர்களை வழி நடத்த இவர்களுக்கு 1.நான் மறைகள், 2. நான் முறைகள், 3. நானெறிகள், 4. நான் வேதங்கள் எனும் நான்கு வகைச் சாத்திறங்கள் பதினெண்சித்தர்களால் படைக்கப்பட்டன.

இச் சாத்திறங்களைப் பயிலும் பள்ளிகளாக நூற்றெட்டுத் திருப்பதிகள், இருநூற்று நாற்பத்து மூன்று சத்தி பீடங்கள், ஆயிரத்தெட்டுச் சிவாலயங்கள் முதலியவைகள் பதினெண்சித்தர்களால் படைக்கப் பட்டன.

தவம், வேள்வி, ஞானம், சித்தம் என்ற நான்கு முறைகளைக் குருவிடம் நேரடியாகக் கற்கும் முறையினையும் பதினெண்சித்தர்கள் படைத்தார்கள்.

மனித வாழ்வு உலகியலில் உழலும் போது சுவை பெறுவதற்காகவே ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் பதினெண்சித்தர்கள் படைத்தார்கள்.

இப் பதினெண்சித்தர்களை உலகம் உணர்வதற்காகவே ஆறு சமயங்களையும், நாற்பத்தெட்டு மண்டலப் படிகளையும், தொண்ணூற்றுறு தத்துவங்களையும் படைத்திட்டவர்கள் பதினெண்சித்தர்களே!

<u>கால வேகமும், கருத்துச் சூழலும் பதினெண்சித்தர்களை மறக்கும்படி செய்யும் போது பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றுகிறுர்கள். எனவே, நாமெல்லாம் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் காலத்தில் பிறந்து உள்ளோம் என்கின்ற போது எவ்வளவு கொடுத்து வைத்தவர்கள் என்பதை உணர வேண்டும்.</u>

தேவையில்லாத நட்பு, உண்மையில்லாத உறவு, ஆசையில்லாத முயற்சி, ஊக்கமில்லாத வாழ்வு, ஆர்வமில்லாத பொழுதுபோக்கு, ஆற்றலில்லாத பயிற்சி, பயனில்லாத செயல், வீண் ஆரவாரம், ஆடம்பரம், பகட்டு .... முதலியவை தேவையில்லாமல்; அடக்கம், அமைதி, உண்மை, பணிவு, ஊக்கம், ஆர்வம், உழைப்பு, நேர்மை ... முதலியவற்றுல் வாழ்பவரோடு பழகி வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

நாம் குருவிடம் அளப்பரிய நம்பிக்கையும், பற்றும் ஏற்பட்டு குருவே எல்லாம் என்று ஏற்றிட்டால்; குருவும், திருவும் ஒன்றென உணரலாம். நாயன்மார்கள் போல அளவற்ற பத்தியும், நம்பிக்கையும் அறிவால் வளர்த்துக் கொண்டால் வெற்றி இப்பிறவியில் கிடைக்கும். இது உறுதி. சோதனைகள் பல உண்டு; அவற்றில் தேறிடல் வேண்டும். கசப்பு, தளர்ச்சி, அயர்ச்சி, பொறுமை, சந்தேகம், அவநம்பிக்கை … முதலிய பிறரின் போதனை நம்மைக் கெடுத்து விடாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

**"கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை"** என்று வாழ்ந்து சென்று இப்பிறவியை வீணாக்கிடல் வேண்டாம். இப்பிறவியில் கிடைத்த குருவைப் பயன்படுத்துவது நமது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

எல்லாம் வல்ல இறையருளால் யாவும் இனிதாகட்டும். பரம்பொருளின் பேரொளி படுகின்ற அனைத்துப் பொருட்களும் ஒளி மயமாகின்றன. ஆனால் பிறவிப் பயனும், ஊழ்வினையும், விதியும் இதை உணர முடியாது குருடராய் வாழும்படிச் செய்கின்றன.

எனவே, **"அவனன்றி அணுவும் அசையாது"**; **"அவனருளால் அவன் தாள் வணங்கி"** என்ற திருமுறைப்படி வாழும் தரமும், தகுதியும், **"வாழையடி வாழையென வருகின்ற திருவருட் பேறு பெறும் திருக்கூட்டத்தில்"** இடம் பெறுகின்ற பேரருள் வள்ளலும் ஆகியவரே நமது குருதேவர்.

**"தன்னையறிந்தால் தலைவனை யறியலாம்;**
**தலைவனை அறிந்தால் தன்னை யறியலாம்."**

**"தன்னையறிய ஒரு தந்திறம் சொல் வெண்ணிலாவே!"**

**"குருவழிக் காண்க."**
**"குருவில்லா வித்தை பாழ்."**
**"குருவும் திருவும் ஒன்றே."**

**“புறக் கண்ணாலும் அகக் கண்ணாலும் குருவைக் கண்டுணர்க.”**

**“குருவருளால் கரு வினை யொழியும்.”**
**“குருவருளால் இரு வினை வெல்லலாம்.”**

...... என்பவைகளை ஆராய்ந்து, அறிந்து, தெரிந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, ஒப்புக் கொண்டு செயல்படுத்துக என்பதே சித்தர்கள் மாணவர்க்குக் கூறும் எண்பேராயத் தத்துவம்.

‘நொடிப் பொழுதில் கோடிக்கலைகள் ஓடி வந்து பணி புரியும் அணிமிகு வாழ்வு குருவின் கடைக்கண் பார்வை ஒரு நொடி தன் மீது படப் பெற்றதால் அடைவான் மாணவன்’ என்பது தாத்தா பதிநோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்களின் அருள்வாக்கு ஆகும்.

நாம் பேராசை இல்லாமல் உரியது கிடைக்கும் வரை நம்பிக்கையோடும், பொறுமையோடும், அடக்கத்தோடும் இருந்து கற்றுப் பயன் பெறல் வேண்டும்.

“பொறுமை, அருவெறுப்பு, போட்டி, பேராசை, ஏக்கம், ஏமாற்றம், எரிச்சல்.... முதலிய தீய உணர்வுகள் அப்பாவி மக்களின் மனதில் புகைய ஆரம்பித்து அது பெரு நெருப்பாகி விட்டால்; அதில் நீ எரிந்து சாம்பலாகி விடுவாய். அதனால், பிறர் கண் உன் மேல் விழாமல், பிறரின் பகை, எதிர்ப்பு, வாதம், வீண் பொல்லாப்பு, பொறுமை ... முதலியவை உன் மீது ஏற்பட்டு விடாமல்; மிக மிக அடக்கம், அமைதி, ஆரவாரம் இன்மை, அதிகம் பேசாமை, பண ஆசை இன்மை, வீண் வாதம் புரியாமை, அகம்பாவம் இன்மை, ஆணவம் இன்மை .... **‘எல்லாம் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயல்’** என்று கூறல் ... முதலிய பண்புகளைப் பெறுக”

..... என்று அடியேனுக்கு ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர் குருதேவர் அவர்கள் 3.6.1975ஆம் தேதியில் அறிவித்த

அறிவுரையையே அனைத்து அடியான்களுக்கும், அடியார்களுக்கும், அடியாள்களுக்கும் அறிவித்துக் கொள்கிறேன்.

உலகியலில் நமக்கு பல வகையிலும் ஏமாற்றம், எதிர்ப்பு, ஏச்சு, பேச்சு, ஏளனம், .... என்று ஏற்படத்தான் செய்யும். ஏனென்றால் இந்த உலகில் மனித வடிவில்தான் அரக்கர், அரக்கியர் இருக்கின்றனர். புராண இதிகாச காலங்களில் அப்படியொரு தனி இனமே இருந்தது. அந்த இனம் அந்தக் காலத்தில் மெய்ஞ்ஞானிகளைத் தவம், பூசை, வேள்வி .... முதலியவை செய்ய விடாமல் தடுத்துத் துன்புறுத்தியது. ஆனால், இப்போது, அப்படியொரு தனி இனம் இல்லை. அதற்கு மாறாக, அந்த இனம் மனித இனத்தோடு ஐக்கியமாகி, மனித வடிவில் பிறந்து, மனிதனாக வாழ்ந்து, பழைய கெடுதல்களைத் தொடர்ந்து செய்து வருகின்றது.

எனவே, இதனை நமது அனைத்து நண்பர்களும் உணர்ந்து செயல்பட வேண்டும். இல்லாவிட்டால், ‘அவர் சொன்னார், இவர் சொன்னார்,’ .... என்று தேவை இல்லாத கருத்துக்களையும், ஐயங்களையும் வளர்த்து பாழாகிட நேரிடும். இதனை நினைத்துத் திருவருளை ஒரு கண்ணாகவும், குருவருளை மற்றொரு கண்ணாகவும் கொண்டு தொடர்ந்து தடுமாற்றமின்றிச் செயல்படக் கற்றுக் கொள்ள வேண்டும். பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி தோன்றிச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்தக் காலத்தில் விதி, ஊழ்வினை, ... காரணமாக நாம் குருவை அடைந்துள்ளோம்.

குருவருளால் நாம் பத்தி, சத்தி, சித்தி, முத்தி நிலைகளில் உயர்ந்து மெய்ஞ்ஞானிகளாகும் போது அதைத் தடுக்கும் பொருட்டு முன்பு கூறியபடி; அரக்கர், அரக்கியர் இனங்கள் நம் வீட்டுக்குள்ளேயே, நம் உற்றார் சுற்றத்தார்களுக்குள்ளேயே, ஊரார்களுக்குள்ளேயே, நெருங்கிய நண்பர்களுக்குள்ளேயே கூட இருந்து குருவை எட்டி விடாமல் தட்டித் தடுத்து விடலாம் என்பதால்; அனைவரும் குருவே கதி என்ற நல்லுணர்வைப் பெற்றுத் தொண்டாற்ற வேண்டும்.

அருளாளர்களின் வாழ்க்கை முழுமை பெற வேண்டுமானால் குருவின் அருள் முழுமையாகச் சித்தியாகி யிருக்க வேண்டும். எனவே குரு கூறக் கூடிய சட்டதிட்டக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, நம்பிப் பொறுமையோடும், பொறுப்போடும் செயலாற்ற வேண்டும். ஏனென்றால், நாம் ஒரு புரட்சிப் படையைத் தெய்வீகத் திருப்பணிகளுக்கு, இந்து மத மறுமலர்ச்சிக்கு, மொழி உரிமைக்கு, இன உரிமைக்கு ..... நன்மை செய்ய, அணி செய்ய உருவாக்குகிறோம்.

புரட்சிப் படைவீரர்களும், தளபதிகளும் போர் ஒழுங்கு, கட்டுப்பாடு, பணிவு, ஆணைக்கு உடனே கீழ்ப்படிதல், எதையும் சொன்னால் உடனுக்குடன் செயல்படல், படைத்தலைவனின் கருத்துக்கு மாறாக எதிராக ஒரு சொல் கூடச் சொல்லாமை, உடனே செயல்படல் (Military Order, Discipline, Obedience, Obey the Order, No word against the Commander, Immediate Action) .... முதலிய பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும். **“Do or Die”**, **“செய் அல்லது செத்து மடி”** என்ற சித்தாந்தம் செயலாக வேண்டும்.

ஆமை வேகத்தில், அவரவர் அறிவுப்படி, ஆலோசனைப்படி, விருப்பப்படி அலட்சியமாகச் செயல்படக் கூடாது. அப்படிப்பட்டவர் குருவின் பின்னால் வர இயலாது. குருவின் வாரிசு என்ற தகுதியையும் பெற முடியாது. அதாவது புரட்சித் தலைவனின் சொல் உடனே செயலாக வேண்டும். இங்கே நாம் குறிப்பிடுகின்ற புரட்சித் தலைவன் யார் என்றால், குரு, குருவின் வாரிசுகள், குருவாணை பெற்றவர்கள் ... என்பவர்களைக் குறிக்கும். எனவே எந்நேரமும் ஒரு அடியான், அடியாள், அடியார் என்றால் சுறுசுறுப்பு, விறுவிறுப்பு, வேகம், பணிவு, குரு என்ற நம்பிக்கை, பொறுப்புணர்ச்சி, புத்திக்கூர்மை ... முதலிய பண்பு நலன்களைப் பெற்றிருக்க வேண்டும்.

சொன்னதை உடனே செய்பவன், கீழ்ப்படிதல், தலையைக் கேட்டாலும் தயங்காது தருபவனால்தான் அமையப் போகிற அருளாட்சியில் பங்கேற்க முடியும். போலிக் கூட்டம் தேவையில்லை. வேலி போட்ட விவசாயம் தேவை என்பது போல்; கட்டுப்பாடு,

கண்டிப்பு அவசியம் தேவை. எனவே, குருவின் கண்டிப்பை எந்தவொரு அடியானும் தவறுகப் புரிந்து கொண்டு மனம் நோக வேண்டாம் என்று அடியவனின் அநுபவத்தைக் கூறுகிறேன்.

"Now or Never. இப்பொழுதே செயல்படு; இல்லாவிட்டால் எப்போதும் செயல்பட மாட்டாய்." என்ற அரிய அறிவுரைப் படி தொண்டர்களைத் தயாரித்ததால்தான் இலெனினுல் ஒரு மாபெரும் புரட்சியைச் செய்ய முடிந்தது. புரட்சி வீரன் ஒரு நொடி சோம்பல், அலட்சியம், கால தாமதம், கீழ்ப்படியாமை ..... உடையவனுக இருந்திட்டால் அவன் அழிவதோடு புரட்சிப் படைக்கே பெரிய நட்டத்தை உண்டாக்கி விடுவான்.

நாம் ஒரு மாபெரும் சமுதாயப் புரட்சி செய்யப் போகிறவர்கள். அன்பு, இரக்கம், விட்டுக் கொடுத்தல் .... முதலிய போக்கால் தவறுனவர்களைப் புரட்சிப்படையில் சேர்த்து விடக் கூடாது. ஆரம்பத்திலே பணிவு, பத்தி, கட்டுப்பாடு, கீழ்ப்படிதல், உடனே செயல்படுதல் ... முதலிய பண்புகள் இல்லாதவர்களால் குருவின் போதனைகளைச் செரிக்க இயலாது எனவே, குருபத்தி இருந்தால்தான் அனைத்தும் சித்தியாகும்.

*'வாய்ச் சொல்லில் வீரர்', 'வாய் வேதாந்தமே இந்து மதம்', 'இந்து மதம் ஏட்டுச் சுரைக்காய்', 'கோயில்களில் இருப்பது கருங்கல்தான்', 'இந்துக்கள் பிற மதக் கடவுள்களையே வணங்குகின்றனர்'* ..... முதலிய கெட்டநிலைகள், பழிகள் ஒழியப் பாடுபடும் அருளாளர்களே நாம். நம்மை அருளாளர்களாக உருவாக்குவது குருவே .....

சித்தர் நெறியின்பால் அதிக நம்பிக்கையும், ஈடுபாடும், விருப்பமும், ஆர்வமும் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற அடியான்கள்; குருதேவர் அவர்களின் கடுமையான கண்டிப்பு வாசகங்கள், சட்டதிட்டங்கள், கட்டுப்பாடுகள், ..... முதலியவைகளைக் கேட்டவுடனேயே; அரச நடை போட்ட அராபியக் குதிரை போன்ற தங்களின் உள்ளத்தைச் சாட்டையடி பட்டதும் பாயும்

குதிரை போன்று குருவை எதிர்த்து நின்றும், மறுத்து நின்றும், பகைத்து நின்றும் செயல்பட்டிடக் கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது! ஒவ்வொரு அடியானின் உள்ளமும் சாட்டையடிக்கு உட்படாமல் ஓடும் குதிரை போல்; பயணத்துக்குப் பயன்படும் சவாரிக் குதிரையாக விளங்க வேண்டும். குருவின் ஆணைகளைச் சரியாகப் புரியாமலும்; குருவை முழுமையாக உணராமலும் உள்ள அடியான், அடியாள், அடியார்தான் சவாரிக்குப் பயன்படாத சண்டிக் குதிரை போலும், நொண்டிக் குதிரை போலும் ஆவார்கள்.

அதாவது, நம்மவர்கள் தெய்வீக உலகையும் புரியாமல், இந்த உலகியலையும் புரியாமல் குழம்பிக் கொண்டிருப்பதால்தான்; “குரு” யார்?, “திரு” யார்? “தான்” யார்? என்று உணர முடியவில்லை. நாம் தரைமேல் நடக்கும் போது போட்டுக் கொள்ளக் கூடிய காலணிகளையும், மேலாடைகளையும் போட்டபடியே நீருக்குள் இறங்கி நீந்துவதென்பது முடியாத காரியம். அப்படியே முயற்சித்தாலும், அது மிக விரைவில் தொல்லையாகவும்; மேற்கொண்டு நெடுநேரம் நீந்த முடியாதபடியும் செய்து விடும். அது போல, நீருக்குள் நீந்துவதற்காகக் குறைந்த ஆடையுடன் செயல்படுவது போல்; தரை மேல் அந்த நீச்சல் உடையுடன் எல்லா இடங்களுக்கும் செல்ல முடியாது. இந்த உவமையை ஒவ்வொருவரும் எண்ணிப் பார்த்தால்; **“தெய்வீக உலகில் செயல்படுபவனால், இந்த உலகியலில் முழுமையாகச் செயல்பட முடியாது என்பதையும்; இந்த உலகியலில் முழுமையாகச் செயல்படுபவனால், தெய்வீக உலகில் முழுமையாகச் செயல்பட முடியாது”** என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

இந்த உலகியலுக்கு உரிய நெறி, சட்டம், முறை, பந்தம், சொந்தம், பாசம், ஆசை, வெறுப்பு, விருப்பு, .... முதலியவைகளை மதிக்கின்றவன், போற்றுகின்றவன் தெய்வீக உலகியலை நம்ப முடியாது, ஏற்க முடியாது, ஒப்புக் கொள்ள முடியாது. ஏனெனில், தெய்வீக உலகியலின் நெறியும், சட்டமும், முறையும், பந்தமும், சொந்தமும், பாசமும், ஆசையும், வெறுப்பும், விருப்பும், ...... முற்றிலும்

புதியவை, நம்ப முடியாதவை, எவராலும் ஏற்க முடியாதவை, எவராலும் எளிதில் ஒப்புக் கொள்ள முடியாதவை. எனவேதான், வெளியில் சொல்லவோ, செயல்படுத்தவோ முற்பட்டுப் பல்வேறு தொல்லைகளை ஏற்பதை விட; எதையுமே வெளியில் சொல்லாமல் கை கால் மடக்கிக் கண்மூடி; வாய் புதைத்துத் தனிமை மிகு தவக் கோலத்தையே! தெய்வீக உலகப் பெரியார்கள் பெரிதும் விரும்பி ஏற்றிட்டனர். யாரோ ஒரு சிலர்தான் எப்பொழுதாவது தங்களின் அநுபவங்களை வெளியில் கூறவும், செயல்படுத்தவும் முற்பட்டிட்டனர். அப்படித் தங்களின் அடைவுகளைப் பிறருக்கு வழங்க முற்பட்டவர்கள் மிக விரைவில் தொல்லைகளை ஏற்று இறுதி பெற்றனர்.

இக் கலிகாலத்தில் நமக்கெல்லாம் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாக, ஞானாச்சாரியாராக, ஞாலகுருவாக, ஞானத் தந்தையாக, இந்துமதத் தந்தையாக, குருமகா சன்னிதானம் சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் குருவாக வந்து பத்தி, சத்தி, சித்தி, முத்தி நிலைகளில் தேர்ச்சி பெறவும்; தரம், திறம், விதி, ஊழ்வினை, ஆள்வினை, சூழ்வினை இவைகளின் அடிப்படையில் கடவுள், ஆண்டவர், தெய்வம், தேவர், விண்ணவர், அமரர், ...... என்ற நாற்பத்தெட்டு வழிபடுநிலைத் தகுதிகளில் உரிய நிலையைப் பெறவும்; மறைகளையும், முறைகளையும், நெறிகளையும், வேதங்களையும் கற்று உணரவும்; **“வாருங்கள் மானுடரே! உங்களைக் கடவுள்களாக ஆக்குகிறோம்”** என்று கூவி அழைத்தும் அருள் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் பேரருள் வள்ளல் பெருமான் என்பதைப் பெருமிதத்துடன் கூறிக் கொள்கிறேன். எனவே, அன்பு கூர்ந்து இவைகளை யெல்லாம் எண்ணிப் பார்த்து மிகமிக நிதானமாக, பொறுமையாக, அறிவு நுணுக்கத்துடன் செயல்படுங்கள்.

பிறர் உங்களை நம்ப வேண்டும் அல்லது புகழ வேண்டும் என்பதற்காகத் தெய்வீக அநுபவங்கள் அனைத்தையும் ஒளிவு

மறைவின்றி வெளியில் சொல்லி விடாதீர்கள். அது, உங்களுக்கு எல்லையில்லாத தொல்லைகளை விளைவித்திடும்.

*"சொல்லாதே யாரும் கேட்டால்*
*எல்லோரும் தாங்க மாட்டார்"*

- என்ற இருபதாம் நூற்றுண்டு இன்னிசைக் கவிஞனின் கவிதை வரிகளை நினைத்துக் கொள்ளுங்கள். ஏனென்றுல், இறைவனே அறுபத்து நான்கு முறை நேரில் தோன்றி, அறுபத்துநான்கு திருவிளையாடல்களைப் புரிந்தும் உணர்ந்து கொள்ளாத, புரிந்து கொள்ளாத, நம்பாத, ஏற்றுக் கொள்ளாத மக்களே நமது சமுதாயத்தவர்கள்.

எனவே, யானையைப் பார்க்காதவனிடம் யானையைப் பற்றி விளக்கம் சொல்லி விளங்க வைக்க முடியாது! பிறவிக் குருடனிடம் பாலின் வெண்மையை விளக்கக் கொக்கின் நிறத்தை உவமையாகக் கூறி விளக்க முடியாது. சர்க்கரையின் இனிப்பை வெறும் சொற்களால் விளக்கிப் புரிய வைக்க முடியாது. இவை போலத்தான் தெய்வீக உலகப் பேருண்மைகளை வெறும் சொற்களால் விளக்கிப் புரிய வைக்க முடியாது. அவரவர் அநுபவத்தாலன்றி உணரப் பட முடியாதவைகள் என்று பல உண்டு. இதனை முழுமையாக உணர்ந்துதான் நீங்கள் செயல்பட வேண்டும்.

**"எல்லாவற்றையும் சொல்ல முடியாது,**
**சொல்வன வற்றையெல்லாம் எழுத முடியாது,**
**எழுதுவன வற்றையெல்லாம் செய்ய முடியாது,**
**செய்வன வற்றையெல்லாம் பிறருக்குக் காட்ட முடியாது,**
**காட்டுவன வற்றையெல்லாம் பிறர் உணர முடியாது."**

என்ற ஐந்தே சித்தர்களின் குருபாரம்பரிய அறிவுரையாகும்.

<u>எல்லோரும் அடியான்களாக, அடியார்களாக, அடியாள்களாகச் செயல்பட இயலாது. விதியும், ஊழும், நாளும், கோளும், முற்பிறவிப் பயனும், குருவருளும், திருவருளும்தான் ஒருவரைக் குருவழி வாரிசாக உருவாக்குகின்றன.</u> எனவே, மேலே கூறப்பட்ட மூவகை அருளாளர்களாகத் தயாராகும் நாம், நம்முடைய நற்பிறவிப் பயன்

காரணமாகவே இப்பிறப்பில் குருவை அடைந்துள்ளோம். இப்படி நாம் பெற்ற குருவை எப்படிக் கண்ணுங் கருத்துமாக போற்றி, வணங்கிப் பயன்படுத்தி, நற்பேறு பெறுவது என்பதைப் பற்றித் தெளிவாகவே அறிந்து கொள்ள வேண்டும். அதற்கு இந்தக் **'குரு பத்தியே சித்திக்கு வழி'** என்ற தொகுப்புக் கட்டுரை மிகமிகப் பயன்பட்டிடும்.

குருவிடமிருந்து சில கண்டிப்புக் குருவாணை வந்தவுடனேயே நாம் வருந்துகிறோம். **'குருவும் திருவும் ஒன்றே'** என்கின்ற போது குரு வழங்கக் கூடிய அனைத்துக் குருவாணைகளும் நன்மைக்கே என்று ஏற்றிடல் வேண்டும். ஆனால், கண்டிப்புக் குருவாணை பெற்று விட்டோமே என்று மனம் தளரவும் கூடாது. அதே சமயத்தில் கண்டிப்புக் குருவாணையின் பொருளை மாற்றியும், திரித்தும், வேறுபடுத்தியும், பதுக்கியும், ஒதுக்கியும் நாமாக ஒரு முடிவை எடுத்துக் கொண்டும் செயல்படக் கூடாது.

அப்படித் தவறாகக் குருவாணைகளை ஏற்றுச் செயல்படுபவர்கள்தான் குருவின் சாபத்தைப் பெற்று, குரு துரோகி என்ற பழிநிலையையும், இழிநிலையையும் அடைந்து பற்பல பிறவிகளில் ஆந்தைகளாகவும், பூனைகளாகவும், நாய்களாகவும், நரிகளாகவும், புறாக்களாகவும், காகங்களாகவும், கோவில் மாடுகளாகவும், குரங்குகளாகவும், ... பிறந்து அல்லல் பட்டுப் பின் அடுத்த பதினெண்சித்தர் பீடாதிபதி தோன்றக் கூடிய ஆயிரம் ஆயிரம் ஆண்டுக் கால இடைவெளிக்குப் பிறகு பிறக்கிறார்கள்.

எனவே, **'குருவிடம் விழிப்போடு இருப்போரே செழிப்பர்'** என்ற குருபாரம்பரிய வாசகத்தை நினைவில் கொண்டு குரு பத்தியுடன் செயல்பட வேண்டும். குரு பத்தியாகச் செயல்படுகிறோம் என்ற போலி உணர்வும், வஞ்சக எண்ணமும், கபட நடிப்பும் உண்மையான குருவழி வாரிசிடம் ஒரு போதும் இருக்காது. எனவே, நாம் எல்லோரும் உண்மையான குருவழி வாரிசுகளாகத் திகழ வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பொன்னை நெருப்பிலிட்டுக் காய்ச்சி உருக்கி அச்சில் ஊற்றியும்; கம்பியாகத் தட்டி, கொட்டி, இழுத்து நீட்டியும், பிறகு வெட்டியும், பொடி வைத்து ஒட்டியும், ..... ஆரம் வைத்துத் தீட்டியும், மெருகேற்றியும்தான் நகை செய்ய வேண்டும். இதே போலத்தான் சித்தர் நெறிச் செல்வர்கள், அதாவது உண்மையான குருவழி வாரிசுகளாகிய நாம் நல்ல நிலை பெறுவதற்காகக் குருவானவர் பொன்னை, தங்கத்தை நெருப்பில் இட்டு உருக்குவது போல் கடுமையான கண்டிப்புக்களை, சட்டதிட்டக் கட்டுப்பாடுகளை வழங்குகிறார்கள். எனவே, யாருக்கும் கண்டிப்போ, சட்டதிட்டக் கட்டுப்பாடோ, எச்சரிக்கைக் குருவாணைகளோ வரும்போது அதனை உரியவர்களும், மற்றவர்களும் இழிவாகவோ, பழியாகவோ, கேவலமாகவோ கருதக் கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது!

குருவால் கண்டிக்கப் படுகிறவர்கள், விமரிசிக்கப் படுபவர்கள்; குருவால் மறுக்கப் படுபவர்களோ, வெறுக்கப் படுபவர்களோ அல்ல. இப் பேருண்மைகளை நம்மவர்கள் அனைவரும் புரிந்து கொண்டால்தான் குருதேவர் அவர்களின் கண்டிப்புக்கள் உரிய பயனை விளைவிக்கும். அதாவது, நமது குருதேவர் அவர்கள் இந்து மதத்தைத் தோற்றுவித்த அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர் பீடாதிபதி என்ற முறையில்; இந்து மதத்தின் தந்தையாக, பிறப்பிடமாக, இருப்பிடமாக, கருவாக, குருவாக, உயிராக, தருவாக, திருவாக, முடிவுக்கும் முடிவாக இருந்து செயல்படுகிறார்.

**//உண்மை நகல்//**

**//மூலம்: அச்சிட்ட குருதேவர் அறிக்கைகள் 12, 13, 14, 15, 1984 ஆண்டு மலர், 25.//**

# மத வழிப் புரட்சிக்குத் தேவதேவியின் பரிந்துரை

1. சமுதாயச் சிதைவு, சீரழிவு, சிதிலங்களுக்கு மதவழிப் புரட்சியே சிறந்த மருந்து. இதனை சமுதாயம் புரிந்து விரும்பி அருந்தும் நிலையை உருவாக்கும் பொறுப்பு மதத் தலைவர்களிடம் இருக்கின்றது. ஆனால், இந்து மதத்தின் தலைவர்கள் சிறுசிறு குறுகிய பிரிவுகளின் எல்லைகளுக்கு உட்பட்டும், கட்டுப்பட்டும் செயல்படக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். அதாவது, ஒட்டு மொத்தமாக இந்து மதத்திற்கென்று ஒரு தலைமைப் பீடமோ, தலைமைத் தத்துவமோ, தலைமைச் சித்தாந்த திருக்கூட்டமோ அல்லது திருச்சபையோ, தலைமைக் குருவோ ..... இல்லை, இல்லை, இல்லை, இல்லவே இல்லை. இப்படி ஒரு நிலை இந்து மதத்திற்கு இந்தக் கலியுகத்தில்தான் அன்னியர்களின் சதிகளால் ஏற்பட்டு விட்டது. இதனைப் புரிந்தும் புரிய வைத்தும், பொறுப்புணர்வோடு பொறுமையாகச் செயல்படக் கூடிய அருளுலகப் பாரம்பரியம் உடைய யாராவது ஒருவராவது முன்வர வேண்டும்! முன்வர வேண்டும்! முன்வர வேண்டும்! முன்வந்தே தீர வேண்டும்! இதனை இந்து மதத்திலுள்ள தலைவர்கள் உணர மறுத்தாலும், உணரா விட்டாலும்; இந்துமதத்தின் பத்தர்கள் உணர்ந்தேயாக வேண்டும், பிறருக்கு உணர்த்தியேயாக வேண்டும். இது பற்றிய கூட்டுச் சிந்தனைகளும், மறு சிந்தனைகளும் தோற்றுவிக்கப் பட்டேயாக வேண்டும்.

2. இந்து மதத்திலுள்ள பெரும்பாலான மக்கள் மெய்யாகவே இந்து மதத்தின் மீது மிகுந்த மதிப்பும், பற்றும், பாசமும், விருப்பமும், நம்பிக்கையும், ஈடுபாடும், ஆர்வமும்.... உடையவர்களாகத்தான் இருக்கின்றார்கள். இன்னும் சொல்லப் போனால் ஒவ்வொரு இந்துவுமே ஏதாவது ஒரு வகையில் தன்னை முழுமையாக

ஓர் இந்துவாகவே கருத்தாலும், உணர்வாலும் வாழ வைத்துக் கொண்டுதான் இருக்கின்றான். ஆனால், ஒரு குறிப்பிட்ட கணிசமான சிறுதொகையினர்தான் உலகியல் காரணங்களுக்காகத் தங்களுடைய கருத்துக்களையும், எண்ணங்களையும் செயற்கையாக வலிந்து மூடி மறைத்துக் கொண்டு மதமறுப்பாளர்களாகவும், நாத்திகர்களாகவும்.... வாழுகின்றார்கள்.

**<u>எனவே, இந்துக்கள் என்று சொல்லப் படுகின்ற அனைவருமே இந்து மதத்தில் ஆர்வமும், நம்பிக்கையும், ஈடுபாடும், பற்றும் உள்ளவர்களாகத்தான் இருக்கின்றார்கள்</u>**. ஆனால், இவர்கள் அனைவருமே ஏறத்தாழ கள்ளங் கபடமற்ற, மென்மையான, வெள்ளை உள்ளம் படைத்தவர்களாகவே இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட இவர்களுக்கு இந்துமதம் பற்றிய

- வரலாறு, இலக்கியம்,
- தத்துவம், செயல் சித்தாந்தம்,
- அருளாளர்களின் சாதனைகள், போதனைகள்,
- கோயில்கள் பற்றிய விஞ்ஞானம்,
- அருட்கலைகள் பற்றிய கல்வி,
- அன்றாட வாழ்வியலுக்குத் தேவையான சடங்கியல்கள்,
- இந்துமதத்தின் மூலவர்களான பதினெண்சித்தர்கள் பற்றிய செய்திகள்,
- இந்துமதத்தின் உயிர்நாடியான தமிழ்மொழி பற்றிய பேருண்மைகள்,
- இந்துமதச் செல்வர்களான தமிழர்கள் பற்றிய உண்மைகள்,
- அருளை அநுபவப் பொருளாகப் பெற விரும்புகின்றவர்களுக்கு மட்டும் தேவையான குரு சார்ந்த வாழ்வு,
- அருளை மருந்தாகவும், விருந்தாகவும் பெற விரும்புகின்றவர்களுக்கு ஏற்ப உதவக் கூடிய பூசாமொழிகள், பூசாவிதிகள்,

.... முதலியவைகளை வழங்குகின்ற நிலைகளும், நிலையங்களும், நிலையினர்களும் தேவைக்கேற்ற அளவுக்குத் தோன்ற வேண்டும்.

இயற்கையாக வாழையடி வாழையாகத் தோன்றுபவர்கள் தேவைக்கேற்ப மேற்படி நிலையங்களையும், நிலையினர்களையும் தோற்றுவிக்க வேண்டும்.

அப்பொழுதுதான், இந்துமதத்தின் முறையான, முழுமையான பயனை இந்துக்களுக்காவது வழங்க முடியும். இதற்குரிய வாய்ப்பு வசதிகளையும், சந்தர்ப்பச் சூழ்நிலைகளையும் இலைமறை காயாக வாழ்ந்து வரும் அருளாளர்களுக்கு வழங்க வேண்டும். வழங்கப் பட்டாக வேண்டும்.

3. இந்துமதத்தில் உள்ள மக்கள் எண்ணற்ற பிரிவினர்களாகப் பிரிந்து அவரவர் விருப்பத்திற்கேற்ப குறிப்பிட்ட கோயில்களுக்கு மட்டும் செல்வது; அல்லது குறிப்பிட்ட கடவுள்களை மட்டும் கும்பிடுவது என்ற பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுகிறவர்களாகவும்; அந்தப் பழக்கமே தொடர்ந்து பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரக்கூடிய முறையாக வளர்த்து வருகின்றூர்கள். இந்த வழக்கத்தால்தான் இந்துமதம் ஒற்றுமைப்பட முடியாமலும், ஒருமைப்பட முடியாமலும் எண்ணற்றப் பிரிவுகளாகப் பிரிந்து பல்வேறு திசைகளில் பிரிந்து பிரிந்து, திசை மாறிச் செல்வன போல இருக்கின்றன.

பார்ப்பவர்களுக்கும், இந்துக்களாகவே வாழ்கின்றவர்களுக்கும், இந்துமதம் பற்றிச் சிந்திக்கின்ற அன்னியர்களுக்கும் இந்துமதம் என்ற பெயரில் எண்ணற்ற அல்லது கணக்கற்ற பிரிவுகளும், மாற்றங்களும், தனித்து வேறுபாடுகளும் உடைய ஒரு கூட்டு மதம்தான் இந்துமதம் என்று முடிவெடுக்கவே நேரிடுகின்றது.

இவற்றை யெல்லாம் எண்ணிப் பார்க்கும் போதுதான் **'இந்துமதத்திலுள்ள <u>கோயில்களைப் பற்றிய செய்திகள் விஞ்ஞான</u> முறைப்படி கற்பிக்கப் படவும் இல்லை, கற்றுக் கொள்ளவும் இல்லை; கற்பிப்போரும் இல்லை, கற்றுக் கொள்வோரும் இல்லை'** என்ற பேருண்மை தெள்ளத் தெளிவாகத் தெரிகின்றது. அதாவது, **'<u>கோயில்களுக்கும் மக்களுக்கும் நேரடித் தொடர்பு இருக்கின்ற அளவுக்கு இந்து மதத்திற்கும் மக்களுக்கும் தொடர்பில்லை</u>'**. இப்பேருண்மையினை இந்துமதத் தலைவர்களும், இந்துமதப் பத்தர்களும்

உண்மையான ஆர்வத்துடன் உணர முற்பட்டு; உணர்ந்து உரிய பரிகாரங்களைத் தேடினால்தான் **இந்து மதத்துக்கு வருங்காலம் உண்டு. இந்துமதத்தின் மூலம் இந்துக்களுக்கு வருங்காலம் உண்டு**.

4. தனிப்பட்ட கடவுள்களை மட்டுமே வழிபடும் பத்தி மார்க்கமும்; தனிப்பட்ட கோயில்களுக்கு மட்டுமே சென்று வரும் விருப்பத்தை வளர்க்கும் பத்தி நெறியும், இந்துமதத்தில் விடுதலை உணர்வு, தனிமனித உணர்வு, தனிமனிதச் சிந்தனை உணர்வு... முதலியவை ஆரம்பம் முதலே போற்றிப் பேணி வளர்க்கப் பட்டு வருகின்றன என்பதற்குச் சான்றுகளாகும். ஆனால், இவையே இந்துமதத்தின் ஒற்றுமைக்கும் ஒருமைப் பாட்டுக்கும் ஊறு பயப்பனவாக, கேடு விளைவிப்பனவாக இருக்கின்றன என்கின்ற போது; இவை பற்றி முறையாக அனைத்து விதமான செய்திகளையும், கருத்துக்களையும் விளக்கி யுரைத்து; கோயில்களின் அடிப்படையில் இந்துமதம் பாதிக்கப் படாத நிலையை வளர்க்க வேண்டும்.

**குறிப்பு:**

**"எல்லாக் கோயில்களும் அருளூற்றுக்களே",**
**"எல்லாக் கடவுள்களும் அருளாளர்களே",**
**"அனைத்து வகையான வழிபாடுகளும் அருளைப் பெறுவதற்கே",**
**"இம்மண்ணுலக மதங்கள் அனைத்தும் பதினெண்சித்தர்களின் சீவநெறி என்னும் கனிமலர்ச் சோலையில் பூத்த மலர்களே, கனிந்த கனிகளே"** - என்ற குருபாரம்பரிய வாசகங்களை விளங்கியும், விளக்கியும் செயல்பட்டால் போதும். இதுவே, அனைத்து வகையான நோய்நிலைகளையும் நீக்கி விடும்.

5. கோயில்களில் உள்ள பூசாறிகள், குருக்கள்கள், ஓதுவார்கள், (48 வகையினர் = கோயில் ஊழியக் காரர்கள்) ... மக்களால் மதிக்கப் படுவதில்லை. அதாவது, இந்துமதத்தின் தலைவர்களாக மதிக்கப் படுவதில்லை. எனவேதான், கோயிலுக்குச் செல்பவர்கள் கோயிலிலுள்ள ஊழியக் காரர்களை இந்துமதத் தத்துவத்தின் காவலர்களாக, இந்துமதத் தத்துவப் பயிர் வளர்க்கும் வேளிர்களாக,

இந்து சமுதாயத்தையும், அரசியலையும் வழிகாட்டி தலைமை தாங்கி வழிநடத்தக் கூடிய தலைவர்களாகவும், வழிகாட்டிகளாகவும் ஏற்க முடியாதவர்களாக இருக்கின்றார்கள்.

அவர்களும், அதாவது கோயில் ஊழியக் காரர்களும், நாட்டிலுள்ள மக்களுக்கு வழிகாட்டியாகவும், வழித் துணையாகவும் இருக்க வேண்டிய பொறுப்பும், தகுதியும் தங்களுக்கு இருப்பதாக உணரவும் இல்லை. ஒப்புக் கொள்ளவும் இல்லை. தங்களைச் சாதாரணக் கூலிக்காரர்களாகவும், வேலைக்காரர்களாகவும்தான் எண்ணிக் கொள்கின்றார்கள். எனவேதான், அவர்கள் தாங்கள் பணிபுரியும் கோயில்களின் வரலாறு, தத்துவம், வழிபாடு பற்றியோ அல்லது இந்து மதம் பற்றிய வரலாறு, தத்துவம் பற்றியோ தெரிந்து கொள்ளும் அக்கறையும், ஆர்வமும், பொறுப்பும் இல்லாதவர்களாகவே வாழ்ந்து சென்று விடுகின்றார்கள்.

எனவேதான், **‘<u>கோயில்களுக்கு வருகின்றவர்களுக்கும், கோயில்களின் ஊழியக் காரர்களுக்கும் தொடர்பில்லாத நிலையே வாழ்ந்து வருகின்றது, வளர்ந்து வருகின்றது.</u>’** இதனால்தான் கோயில்களுக்கு வருகின்றவர்களுக்குள் ஒற்றுமையோ, ஒருமைப்பாடோ, கட்டுப்பாடோ உருவாக முடியாமல் இருக்கின்றது. அதனால்தான், கோயிலைப் பாடிவீடாக மாற்றியோ, பாசறையாக மாற்றியோ அருட்படையைத் திரட்டும் முயற்சிகள் மாபெரும் தோல்வியைத் தழுவி வருகின்றன.

எனவே, கோயில்களுக்கு வருகின்றவர்களை ஆறுகாலப் பூசையின் போது கூட்டமாகக் கூடி, தேங்கி நிற்கச் செய்து அவர்களுக்குப் பதினெண்சித்தர்களின் சீவநெறியான **‘இந்து மதம்’** என்னும் சித்தர் நெறியின் தத்துவங்களையும், சித்தாந்தங்களையும், வரலாறுகளையும், அக ஞானங்களையும், புற ஞானங்களையும், கோயில் ஞானங்களையும், ஆவி ஆன்மா ஆருயிர் பற்றிய ஞானங்களையும்; பத்தி, சத்தி, சித்தி, முத்தி முதலிய நிலைகளை அடையும் அருள்வழியையும் பற்றி விளக்கிடல் வேண்டும்.

இவற்றை யெல்லாம் விளக்கிடக் கூடிய வகையில் கோயில் ஊழியக் காரர்களே செய்யுமளவிற்கு ஏட்டறிவையும், பட்டறிவையும்

அதிகமாக்க வேண்டும். அதாவது கோயில் ஊழியக் காரர்கள் கட்டாயமாக ஒரு குறிப்பிட்ட அளவு ஏட்டறிவும், பட்டறிவும் இருக்க வேண்டும் என்பதற்காக கட்டாயமாகக் குருகுலக் கல்வியைச் செயலாக்கியே தீர வேண்டும். அப்பொழுதுதான் கோயிலுக்கும், மக்களுக்கும் தொடர்பு ஏற்பட்டிடும்; கோயில் ஊழியக் காரர்களுக்கும், மக்களுக்கும் தொடர்பு ஏற்பட்டிடும். அவற்றின் அடிப்படையில் இந்து மதத்திற்கும் மக்களுக்கும் தொடர்பினை ஏற்படுத்த முடியும்.

**குறிப்பு:** கோயில்களுக்குச் செல்லும் இந்துக்கள் இந்து மத இலக்கியங்களுக்கும், தத்துவங்களுக்கும், வரலாறுகளுக்கும், இந்து மத அருளாளர்களுக்கும், இந்து மத இலக்கிய அறிஞர்களுக்கும் மதிப்போ, மரியாதையோ கொடுக்கத் தெரியாதவர்களாகவும், கொடுக்க விரும்பாதவர்களுமாகத்தான் இருக்கின்றார்கள். அதாவது, இவர்கள் உண்டியில் காசு போடத் தயாராக இருக்கின்றார்களே தவிர, இந்து மத வளர்ச்சிக்காக ஒரு காசு கூடச் செலவழிக்கத் தயாராக இல்லை. அதாவது இவர்கள் இந்து மதம் வளர்க்கப் பட வேண்டும், காக்கப் பட வேண்டும் என்ற எண்ணமே இல்லாத அப்பாவிகளாக இருக்கின்றார்கள்.

இதைப் பச்சையாகவும், கொச்சையாகவும் சொல்ல வேண்டுமென்றால்; **இந்து மதத்தில் கோயில்களுக்குச் செல்கிறவர்களில் முக்கால்வாசிப் பேர் இந்து மதம் என்ற ஒன்றே தெரியாதவர்களாகவேதான் இருக்கின்றார்கள்.** எனவேதான், '**இந்து மதத்தின் நிறுவன நிர்வாக அலுவலகங்கள்தான் கோயில்கள்**' என்ற பேருண்மை தெரியாதவர்களாக இருப்பவர்கள்தான் நூற்றுக்குத் தொண்ணூறுக்கு மேற்பட்டவர்களாக இருக்கின்றார்கள். இதற்குக் காரணம், கோயில்களுக்கும் இந்து மதத்துக்கும் தொடர்பில்லாமல் இருப்பதுதான்; மேலும், கோயில் ஊழியக் காரர்களுக்கும் இந்து மதத்துக்கும் தொடர்பு இல்லாமல் இருப்பதுதான். அதாவது, கோயில் ஊழியக் காரர்களுக்குத் தேவையான அளவு கூட ஏட்டறிவோ, பட்டறிவோ இல்லாமல் இருப்பதுதான்.

6. **<u>இந்து மதத் தலைவர்கள்:</u>** இந்துமதம் என்றாலேயே சைவம், வைணவம், மாத்வம், கபாலிகம்... என்று எண்ணற்ற பெரிய பெரிய உட்பிரிவுகள்தான் மிகமிக வெளிப்படையாகத் தெரிகின்றன. இந்த உட்பிரிவுகள் எல்லாம் தனித்தனி மதங்கள் போல செயல்படுகின்றன. மேலும், இவற்றுக்குத் தனித்தனி இடங்களும், தனித்தனித் தலைவர்களும் ஒருவரோடு ஒருவர் ஒற்றுமையில்லாத அளவுக்கு வேறுபட்ட வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றார்கள். இவற்றிற்கெல்லாம் மேலாக இவர்கள் ஒருவரோடு ஒருவர் பல்வேறு வகையான கருத்து வேறுபாடுகளையும், செயல் போராட்டங்களையும் வளமாக வளர்த்துக் கொண்டே வருகின்றவர்களாக இருக்கின்றார்கள்.

எனவே, இந்து மதத்திலுள்ள பல்வேறு பிரிவுகளின் தலைவர்கள்
***<u>'இந்து மதம் என்ற ஒன்றில்லை',</u>***
***<u>'இந்து மதத்துக்கு என்று ஒரு தலைமை இல்லை',</u>***
***<u>'இந்து மதத்துக்கென்று ஒரு தலைவர் இருக்க முடியாது',</u>***
***<u>'இந்து மதத்தை ஒற்றுமைப் படுத்தக் கூடிய தத்துவம் எதுவும் இல்லை',</u>***
***<u>'இந்து மதத்துக்கு வரலாறு இல்லை',</u>***
***<u>'இந்து மதத்திற்கென்று தலைமையினம் இல்லை',</u>***
***<u>'இந்து மதத்துக்கென்று தலைமைக் குருமார் இல்லை',</u>***
***<u>'இந்து மதத்துக்கென்று தலைமையான புத்தகம் இல்லை, அதாவது இலக்கியம் இல்லை</u>'.***

.... இப்படி யெல்லாம் தங்கள் தங்கள் போக்கிலே இந்து மதத்தை நலிவுபடுத்தி, மெலிவுபடுத்தி, நோய்ப்படுத்தக் கூடிய கருத்தைக் கூறி வருகின்றார்கள். இவற்றிற்கெல்லாம் மேலாக, தங்கள் தங்கள் நிறுவனங்களின் அதாவது திருச்சபைகளின் முதல் தலைவர்களையும், நிறுவனங்களையும், முதல் கோயில்களையுமே அருளுலகச் சிறப்புக்கும், முதன்மைக்கும் உரியதாக விளம்பரப் படுத்தி வருகின்றார்கள். இன்னும் சொல்லப் போனால், இந்து மதத்தின் தோற்றத்தையே இதனோடு தொடர்பு படுத்தி வருகின்றார்கள்.

அதாவது மடாதிபதிகளை, பீடாதிபதிகளை, ஆச்சாரியார்களை, அருளாளர்களை, சித்தியாளர்களை, சித்து விளையாடல் காரர்களை.... தலைவர்களாகக் கொண்டு காலங்கள் தோறும் தோன்றிடக் கூடிய நிறுவனங்களாகவும், நிர்வாகங்களாகவும் இந்து மதம் வளம் பெற வேண்டும், வலிமை பெற வேண்டும், வளர்ச்சி பெற வேண்டும். ஆனால், இதற்கு நேர்மாறாக, மேற்படி நிறுவன நிர்வாகங்கள் அனைத்துமே இந்து மதத்தை நலிவுபடுத்தி, மெலிவுபடுத்தி, நோய்நிலைக்கு உள்ளாக்கியே வருகின்றன. அதாவது, இந்து மதத்தில் தலைவர்களாக மதிக்கப் படுகின்ற அருளாளர்களில் ஏறத்தாழ 99 (தொண்ணூற்றொன்பது) பேர்களுக்கு மேல் தாங்கள் பெற்ற அருட்சத்தியின் மூலம் புகழை நிலைநாட்டிச் சென்றவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றுகின்ற ஏதோ சில தலைவர்கள்தான் தங்களை அறியாமலும் அறிந்தும்; மதத்தின் தேவைகளைப் புரிந்தும் புரியாமலும்; மதத்தின் தத்துவத்திற்கும், சித்தாந்தத்திற்கும், சடங்கியல்களுக்கும், இலக்கியங்களுக்கும் காரண காரியங்களை விளக்குபவர்களாகவும், வரலாற்றுச் சான்றுகளை வழங்குபவர்களாகவும், தேவையான அளவு உலகியலோடு கூடிய விளக்கங்களை வழங்குபவர்களாகவும் வாழ்ந்து சென்றிடுகின்றார்கள். அதனால்தான் இந்து மதம் முழுக்க மறைந்து விடாமல் மங்கியும், மறைந்தும், குறைந்தும், தேங்கியும், முடங்கியும், அடங்கியும், ஒடுங்கியும், பதுங்கியும், நோய்நிலையுற்றும்.... மாயாமல் தளர்நடை போட்டு வாழ்ந்து வருகிறது. இதனைப் புரிந்தும் புரியவைத்தும், உணர்ந்தும் உணரவைத்தும் செயல்படக் கூடிய தலைவர்களும் தோன்றுவது அரிதாக இருக்கிறது; தொண்டர்களும் தோன்றுவது அரிதாக இருக்கிறது.

இதைப் பச்சையாகச் சொல்ல வேண்டுமென்றால், இந்து மதத்தின் நலிவுற்ற நிலையைப் புரிந்து செயல்படக் கூடிய நாத்திகர்களும் அதிக அளவு இல்லை, ஆத்திகர்களும் அதிக அளவு இல்லை. இந்து மதத்தில் ஏறத்தாழ எல்லோருமே ஏனோதானோவென்று

வாழுபவர்களாகத்தான் இருக்கிறார்கள். அதாவது, ஏன் கோயிலுக்குப் போக வேண்டும் என்று எண்ணிப் பாராமல் கோயிலுக்குப் போகிறவர்களும், கோயிலை ஏன் வெறுத்து ஒதுக்க வேண்டும் என்று எண்ணிப் பாராமல் கோயிலை மறுக்கிறவர்களுமே மிகுதியாக இருக்கிறார்கள் இந்து மதத்தில். எனவேதான், எந்த ஒரு பெரிய விளைவும் ஏற்படாமல் இந்து மதம் மெதுவாக நத்தை வேகத்தில் நகர்ந்து கொண்டிருக்கிறது.

இவற்றிற்கு எல்லாம் முழுப் பொறுப்பாக அல்லது முழுக் காரணமாக இருக்கிறவர்கள் இந்து மதத் தலைவர்கள்தான். இந்தத் தலைவர்கள் அனைவருமே தங்கள் தங்கள் பின்னால் குறிப்பிட்ட தனித்த சிறுசிறு கூட்டங்களை வைத்துக் கொண்டு; அதற்கேற்ப ஆதரவாளர்களையும் வளர்த்துக் கொண்டு; குறிப்பிட்ட வட்டத்துக்குள்ளே செயல்பட்டு விட்டுச் செல்பவர்களாகத்தான் இருக்கிறார்கள். இவர்கள் அண்டபேரண்டம் அனைத்தும் ஆளுகின்ற தொன்மையான, மேன்மையான, நுண்மையான, திண்மையான, நுட்பதிட்ப மிக்க, உயரிய, விரிந்து, பரந்துபட்ட இந்து மதத்தைப் பற்றி ஆழமாகச் சிந்தித்துச் செயல்பட முடியாதவர்களாகவே இருக்கிறார்கள்! இருக்கிறார்கள்! இருக்கிறார்கள்! எனவேதான், இந்து மதத் தலைவர்களால் இந்து மதத்திற்கு வளவளர்ச்சியோ, வலிமைப் பொலிவோ ஏற்படவே இல்லை.

7. **<u>மக்களும் மதத் தலைவர்களும்:</u>** மக்களுக்கும் மதத் தலைவர்களுக்கும் இந்து மதத்தில் தொடர்பு இருப்பதாகச் சிறப்பாகக் கூறக் கூடிய அளவிற்கு எதுவுமே இல்லை. ஒன்று பொருள் மிகுதியாகப் படைத்த தலைவராக இருக்க வேண்டும்; அல்லது அருள் மிகுதியாகப் படைத்த தலைவராக இருக்க வேண்டும். இந்த இரண்டில் ஒன்று உடைய தலைவர்கள் பின்னால்தான் மக்கள் கூட்டம் இருக்கும். அதாவது, இந்து மத மக்கள் உடனடியாகத் தங்களுடைய தேவைகளைத் தீர்த்துக் கொள்ளத் தங்களுக்குப் பொருளைத் தரக்கூடிய தலைவர்களை அல்லது அருளைத் தரக்கூடிய

தலைவர்களை மட்டுமே மதிக்கத் தயாராக இருக்கிறார்கள். எனவே, இவர்களுக்கு இந்து மதத் தலைவர்களாக இருக்கக் கூடியவர்களுக்கு

(1) நெடிய பெரிய பாரம்பரியங்கள் தேவையென்றோ;

(2) மதத் துறையில் முறையான ஏட்டறிவு நிறைவாகத் தேவையென்றோ;

(3) மதத் துறைக்குரிய அருட்கலைகளிலும், அறிவியல்களிலும், சாத்திரச் சம்பிறதாயச் சடங்கியல்களிலும் நல்ல பயிற்சியும், தேர்ச்சியும் பெற்று முதிர்ந்திருக்க வேண்டுமென்றோ;

... எண்ணிப் பார்ப்பவர்களாக இல்லை. அதாவது, பெரும்பாலான இந்து மக்களுக்குத் தேவைப்படுவது எல்லாம் தங்களுடைய அவசரத் தேவைகளுக்கு உதவக் கூடிய பொருளையோ, அருளையோ உடனே தரக்கூடிய மதத் தலைவர்கள்தான். எனவேதான், இந்து மதத்தை மெய்யாகவே பணிவோடும், துணிவோடும் வளர்க்கக் கூடிய மதத் தலைவர்கள் தோன்ற முடியவில்லை.

இப்படி இந்து மதத்தின் பெரும்பாலான பொதுமக்களால்தான் இந்து மதத்திற்கு நல்ல பாரம்பரியங்களுடைய, நிறைந்த ஏட்டறிவும் பட்டறிவும் உடைய, இந்து மத வரலாறுகளிலும் இலக்கியங்களிலும் சடங்கியல்களிலும் மிகுந்த புலமையுடைய ஆற்றல் மிக்க தலைவர்கள் தோன்ற முடிவதில்லை; அல்லது தோன்றினாலும் கெடுத்து விடுகிறார்கள் என்பதுதான் உண்மை. எனவேதான், இந்து மதம் அரசனில்லாத நாடு போலவும், தளபதி இல்லாத படை போலவும், மாலுமி இல்லாத கப்பல் போலவும் விளங்கி வருகிறது.

இதை முழுமையாக மாற்றி அமைக்க வேண்டுமென்றால் இந்துக்களில் பொதுமக்கள் எனப்படும் பெரும்பாலான மக்களிடையில் இந்து மதம் பற்றிய தத்துவ அறிவு, வேதாந்த அறிவு, சித்தாந்த அறிவு, வரலாற்று அறிவு, இலக்கிய அறிவு, கலை அறிவு முதலிய அறிவுகளெல்லாம் பகுத்தறிவு மிக்க ஆராய்ச்சிப் போக்கிலும், விஞ்ஞானச் சூழ்நிலையிலும் வளர்க்கப் பட்டாக வேண்டும். அதற்கு உலகம் முழுவதுமுள்ள இந்து மதத்தின் பல்வேறு அமைப்புக்களின் தலைவர்களும், இந்து மதப் பேரறிஞர்களும், இந்து மத வாழ்வில்

மெய்யான பத்தி உடையவர்களும் ஒன்று கூடிப் பலமுறை சிந்தித்துப் பல புதிய செயல்திட்டங்களை உருவாக்க வேண்டும். அதன்மூலம் இந்தக் குறைபாட்டை அகற்றிட வேண்டும். இல்லாவிட்டால், இந்து மதத்திற்கு வருங்காலமில்லை. எனவேதான், எல்லோரையும் சிந்திக்க அழைக்க வேண்டியிருக்கிறது.

**குறிப்பு:-** இந்து மதப் பொதுமக்களிடையே இந்து மதத் தலைவர்களை மதிக்கும் பண்பும், உணர்வுப் போக்கும், சிந்தனைப் போக்கும், எண்ணப் போக்கும், கருத்துப் போக்கும் மிகப் பெரிய அளவில் பாதிக்கப் பட்டுள்ளன. இதற்குக் காரணம் மாற்று மதங்களும், நாத்திகப் போக்கும், மத விரோதச் சத்திகளும், மதத் துரோகச் சத்திகளும் மட்டும் அல்ல! அல்ல! அல்ல! அல்லவே அல்ல! இந்து மதத்திலுள்ள பொதுமக்களில் பெரும்பாலானவர்களின் அறியாமையே இதற்குக் காரணம். அதாவது, ஏறத்தாழ இந்து மதத்தில் ஏதாவது ஒரு தலைவரோ அல்லது நிறுவனமோ **இந்து மதம் பற்றிய அறிவை வரலாற்றுப் பின்னணியில், இலக்கிய வளத்தோடு, தத்துவ அடிப்படையோடு, செயல்முறைச் சிந்தனையோடு வளர்க்கிறார்கள் என்று கூறுவதற்கு இல்லை, இல்லை, இல்லை, இல்லவே இல்லை**.

எனவேதான், கருத்து விளக்கத்திற்காகக் கற்பனையாகவும் உருவகமாகவும் கூறப்பட்ட பெரும்பாலான புராண இதிகாசக் கதைகளை யெல்லாம் முழுமையாக அப்படியே இந்து மதத்தின் நேரடி விளக்கமாகக் கருதிக் கொண்டு அறியாமையிலும், புரியாமையிலும் கிடந்து உழலுகிறார்கள். அப்படிப் பட்ட அவர்களின் அறியாமைகளையும், புரியாமைகளையும் பயன்படுத்திக் கொண்டுதான் மதத் துரோகிகளும், மத விரோதிகளும், நாத்திகர்களும், வேற்று மதத்தவர்களும் எல்லா விதமான தயக்க மயக்கக் குழப்பங்களையும், தடுமாற்றங்களையும் விளைவித்து விடுகிறார்கள். எனவே, மதத் தலைவர்களும், மத நிறுவனங்களும்தான் திருந்த வேண்டும், திருந்த வேண்டும், திருந்த வேண்டும்.

8. **<u>சடங்கியல்களும் விழாக்களும்:</u>** இந்துக்களில் படித்தவர்கள் முதல் படிக்காத பாமர மக்கள் வரை அன்றாட வாழ்க்கையில் என்னென்ன சடங்குகளைச் செய்ய வேண்டும் என்பதைக் கண்மூடித்தனமாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் அவற்றை யாருமே சாத்திறப் பூர்வமாகவோ, சாத்திரப் பூர்வமாகவோ தெரிந்து கொள்ள விரும்புவதில்லை, புரிந்து கொள்ள முயலுவதில்லை.

இதைப் போலத்தான் ஏறத்தாழ எல்லா இந்துக்களுமே மாதந்தோறும் வரக் கூடிய விழாக்களையும் நன்றாக நினைவில் வைத்துக் கொள்பவர்களாக இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் அந்த விழாக்களை எப்படிக் கொண்டாட வேண்டும் என்ற செய்திகளைத் தெரிந்தவர்களாகவும், அந்த விழாக்களைக் கொண்டாடுவதில் ஆர்வம் உடையவர்களாகவுமே இருக்கிறார்கள். ஆனால், அந்த விழாக்களுக்குரிய வரலாற்றையும், இலக்கியங்களையும் முறையாகவும் முழுமையாகவும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வமும், அக்கறையும் இல்லாதவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

இதற்கெல்லாம் காரணம் இந்துக்கள் தங்களுடைய மதத்தைப் பற்றிய வரலாறுகளையும், இலக்கியங்களையும், தத்துவங்களையும், சடங்கியல்களையும், விழாக்களையும் மதக் கல்வியாகவே கற்பதில்லை; கற்பிக்கப் படுவதுமில்லை. அதாவது, பொதுவாக இந்துக்களுக்கு இந்து மதத்தைக் கல்வியாகவே கற்க வேண்டும் என்ற உணர்வு இடைக் காலத்தில் எப்படியோ தடைப்பட்டு விட்டது. ஏனென்றால், பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றிய காலங்களில் எல்லாக் கருகுலங்கள், குருகுலங்கள், தருகுலங்கள், திருகுலங்கள் எனும் நான்கையும் உருவாக்கி இந்து மதத்தை ஏட்டறிவாகவும், பட்டறிவாகவும் வழங்கக் கூடிய ஆசிரியர்களைக் கணக்கற்றுத் தோற்றுவித்து நாடெங்கும் உள்ள அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களிலும், அ.வி.தி. நிலையங்களான பதினெட்டு (18) வகைக் காடுகளிலும், அ.வி.தி. பணிக்காகத் தோற்றுவிக்கப் படும் அருட்கோட்டங்களிலும் இந்து மதக் கல்வியைக் கற்றுக் கொடுக்கும் செயல்திட்டத்தைத்தான் வளர்த்து விட்டார்கள். அதற்காகவே எண்ணற்ற

நூல்களையும், குருவழியாகக் கேட்டு உணரும் மறைகளையும், ஓச்சுக்களையும் தாராளமாக வாரிவாரி வழங்கினார்கள்.

அதாவது, பதினெண்சித்தர் பீடாதிபதிகள் சாதாரண பொதுமக்களுக்கு இந்து மதக் கல்வியை வழங்கக் கூடிய புலமையும், தரமும், திறமும், திறமையும், அக்கறையும், ஆர்வமும் உடைய ஆசிரியர்களைக் கணக்கற்றுத் தோற்றுவித்து அவர்கள் வாழையடி வாழையாகத் தோன்றுமாறு செய்திட்டார்கள் என்பதால்தான்; இந்து மதக் கல்வி தனிமனித இல்லங்களிலும், தாழ்வாரங்களிலும், பொது மன்றங்களிலும், வழிபாட்டு நிலையங்களிலும், கலைக் கூடங்களிலும், கல்விச் சாலைகளிலும், தவப் பள்ளிகளிலும் முளைத்துக் கிளைத்துச் செழித்து வளர்ந்தன, வளர்க்கப் பட்டன.

ஆனால், இப்படிப் பரவலாக வளர்க்கப் பட்ட இந்து மதக் கல்வியும், கல்வி நிறுவனங்களும் எப்படி நிறுத்தப் பட்டன? எப்பொழுது நிறுத்தப் பட்டன? ஏன் நிறுத்தப் பட்டன? எவரெவரால் நிறுத்தப் பட்டன? என்னென்ன செய்து நிறுத்தப் பட்டன? இக்கல்வி நிறுத்தப் பட்டதை இந்து மதத் தலைவர்கள் கண்டிக்க வில்லையா? இந்துக்கள் எதிர்க்க வில்லையா? இந்து மதக் கல்விச் சாலைகள் என்னவாயின? கல்விக்குரிய நூல்கள் என்னவாயின? .... என்ற வினாக்களையெல்லாம் எழுப்பி இவற்றுக்கு விடைதேடிப் புறப்படுகிறவர்கள்தான் இந்து மதத்திற்கும், உலக மதங்களுக்கும், உலக அருளாட்சிக்கும், உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டிற்கும், உலகப் பண்பாட்டு விடுதலைக் கொள்கைக்கும், உலக மொழி விடுதலைக் கொள்கைக்கும், உலக இன விடுதலைக் கொள்கைக்கும், உலகத் தனிமனித விடுதலைக் கொள்கைக்கும் உரிய நன்மைகளை மிகப் பெரிய அளவில் செய்திட முடியும், செய்திட முடியும், செய்திட முடியும்.

ஏனெனில், இந்து மதம்தான் இம்மண்ணுலகின் முதல் மதம், மூல மதம். அதுவே சிதிலமடைந்து, சிதைந்து, சீரழிந்து கிடக்கின்றது என்றால்; இம்மண்ணுலகிலுள்ள எந்த மதத்திற்கும் முழுமையான

உண்மையும், பெருமையும், பயனும் கிடைக்காது, கிடைக்காது, கிடைக்காது; விளையாது, விளையாது, விளையாது. எனவேதான், இந்து மதத்திலுள்ள சடங்குகளுக்கும், விழாக்களுக்கும் சாத்திரப் பூர்வமான விளக்கங்களையும், சாத்திறப் பூர்வமான விளக்கங்களையும் இலக்கியப் பூர்வமாகக் கண்டறியவும்; விண்டுரைத்து வழங்கவும் முற்படும் பணி துவங்கப் பட வேண்டும், துவங்கப் பட வேண்டும், துவங்கப் பட வேண்டும். அதற்கு இந்து மதத்தின் இலக்கிய, இலக்கணச் செல்வங்களை அனைத்து வகையான மறைவிடங்களில் இருந்தும், மறைப்புக்களில் இருந்தும், தடுப்புக்களில் இருந்தும் வெளிக் கொணரும் அருளுலகப் பெருவீரர்களும், பெருந் தளபதிகளும், பெருந் தலைவர்களும் தேவை, தேவை, தேவை.

இவற்றிற்கெல்லாம் மேலாக இந்து மத மக்களிடையே வெளிப்படக் கூடிய இந்து மதப் பெரு வீரர்களையும், பெருந் தளபதிகளையும், பெருந் தலைவர்களையும் ஏற்றுப் போற்றிப் பேணிப் புகழ்ந்து பயன்படுத்திக் கொள்ளக் கூடிய நல்ல மனநிலையை உடைய மக்கள் எண்ணிக்கையில் பலராக நாடு முழுவதும் உருவாகிடல் வேண்டும் அல்லது உருவாக்கப்படல் வேண்டும். இம்மாபெரும் புரட்சித் திட்டத்திற்குத் தேவையான செயல்வீரர்களும், பொருளும் பிற உதவிகளும் வழங்கிடுமாறு வேண்டுகோள் விடுத்துச் செயல்படுவதே இன்றைய இந்து மத அருளாளர்களின் கடமை.

9. **<u>மதமும் மக்களும்:</u>** நமது இந்து மதம் தனிமனித அளவிலும், குடும்ப அளவிலும், சமூக அளவிலும் உயிரோடு செழிப்பாகத்தான் இருக்கிறது. அதாவது, நம்முடைய இந்துக்கள் எந்த அன்னிய மதங்களுக்கு மாறினாலும் அவர்கள் நமது இந்து மத நம்பிக்கைகளையும், கொள்கைகளையும், கோட்பாடுகளையும், சாத்திறச் சம்பிறதாயங்களையும், சடங்குகளையும், விழாக்களையும் மறக்காமல் கொண்டாடுபவர்களாகத்தான் வாழுகிறார்கள்.

இதேபோல இந்து மதத்தில் நாத்திகர்களாக இருக்கும் குறிப்பிட்ட தனிநபரைத் தவிர அவரது குடும்பத்தவர்கள் ஆத்திகர்களாகத்தான்

வாழுகிறார்கள். இந்து மத மறுப்பாளர்களும், சீர்திருத்த வாதிகளும் **<u>ஒரு சில இந்து மதத் தலைவர்களையும், ஒரு சில இந்து மத இலக்கியங்களையும்</u>** மட்டும் குற்றம் சாட்டிக் குறை கூறுபவர்களாகத்தான் இருக்கிறார்களே தவிர முழுக்க இந்து மதத்தைக் குறை கூறுபவர்களாக, குற்றம் சாட்டுபவர்களாக இல்லை.

இந்து மதத்திலுள்ள எல்லாக் கோயில்களிலும் எப்போதும் கூட்டம் நிறைந்து வழிந்து கொண்டுதான் உள்ளது. இந்து மத விழாக்கள் அனைத்தும் நாடு முழுதும் கோலாகலமாகக் கொண்டாடப் பட்டுத்தான் வருகின்றன. எனவே, இந்து மதத்தை வடிவமைப்புச் செய்யும் முயற்சியைச் செய்தால் மட்டும் போதும். மிக விரைவில் இந்து மதத்திற்குத் தேவையான நிறுவனங்களையும், நிருவாகத் தலைவர்களையும், செயல்வீரர்களையும் உருவாக்கிடலாம்.

அதன்பிறகு 43,73,087 ஆண்டுகளாக (கி.பி.1986இல்) இருந்து வரும் இந்து மதத்தின் பல்வேறு வகையான வரலாறுகளையும், வாழ்வியல்களையும், போதனைகளையும், சாதனைகளையும் விளக்கிடக் கூடிய இலக்கியங்களையும் தேவையான அளவு பழமை மாறாமல் எளிமைப்படுத்தியும்; பழையனவற்றை அப்படியே வெளியிட்டும்; இந்து மதத்திற்கென இலக்கிய வளத்தை உண்டாக்கி விடலாம். இவற்றால் இந்து மதம் தனது முழு வலிவையும், பொலிவையும் பெற்று ஆட்சி மீட்சியைப் பெற்றிடும். அதன்பிறகு இந்து மதத்தின் அருளுலக ஆட்சிமொழியான அண்டபேரண்டமாளும் அமுதத் தமிழ்மொழியை என்றென்றும் அதன் உரிமை நிலையிலேயே பெருமையோடு வாழுமாறு செய்திடலாம். இம்மண்ணுலகம் முழுவதற்கும் அருளுலகச் சமத்துவத்தையும், பொதுவுடமையையும், சமாதானத்தையும், கூட்டுடமையையும், ஆன்மநேய ஒருமைப்பாட்டையும் வழங்கக் கூடிய பொறுப்பினை இந்து மதத்தின் மூலவர்களாகவும், காவலர்களாகவும் இருக்கும் தமிழர்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

அதாவது, தமிழின விடுதலையே உலக மானுட இனங்களின் தன்னுரிமை மிக்க விடுதலையாகிடும். எனவே, பதினெண்சித்தர்களின் தத்துவப்படி எந்த ஒரு இனமோ, மொழியோ, நாடோ மற்றோர் இனத்தையோ, நாட்டையோ, மொழியையோ அடிமைப்படுத்தாமல், சுரண்டாமல், சர்வாதிகாரம் செய்யாமல், ஏமாற்றாமல் அனைத்து இனங்களும், மொழிகளும், நாடுகளும் சம உரிமையோடும், பெருமையோடும் கூடிய சமாதான வாழ்வு வாழும் பொற்காலம் உருவாகிடும். இப்படிப்பட்ட நற்காலம் உருவாவதற்கு உழைக்கும் ஆற்றல் இந்து மதத்திற்குத்தான் உண்டு, உண்டு, உண்டு.

இங்கு இந்து மதம் என்றால் பதினெண்சித்தர்கள் கண்டுபிடித்த சமூக விஞ்ஞானம் என்றே பொருள்படும். இந்தச் சமூக விஞ்ஞானத்திற்கு உட்பட்டதுதான் அரசியல். எனவே, பதினெண்சித்தர்களின் தத்துவப்படி அரசியலுக்கு அடங்கியதாக இந்து மதம் இருக்க முடியாது. இந்து மதத்திற்கு அடங்கியதாகத்தான் அரசியல் இருக்க முடியும். அதாவது, **பதினெண்சித்தர்களின் சீவநெறியான சித்தர் நெறி எனும் இந்து மதத்தின் படி, 'சமூக விஞ்ஞானமான மெய்யான இந்து மதமே அரசியலுக்கு அடிப்படையாகவும், தலைமையாகவும், வழியாகவும், வழிகாட்டியாகவும், வழித்துணையாகவும், வழிப்பயனாகவும் இருக்க வேண்டும், இருக்க வேண்டும், இருக்க வேண்டும்.**

ஆனால் காலப்போக்கில் கோணல் நெஞ்சமும், குறுக்குச் சிந்தையும், குற்ற உணர்வும், வெறிப் போக்கும் உடைய அரசியல்வாதிகள் என்றென்றைக்கும் மதம் அரசியலுக்குக் கட்டுப்பட்டே இருக்க வேண்டும் என்பதற்காக; மதத்தையும், மதத் தலைவர்களையும், மத நிறுவன நிருவாகங்களையும் கண்டித்துத் தாக்கி, இழிவுபடுத்தி, சிறுமைப் படுத்தி, கேலிக்கும், கிண்டலுக்குமே ஆளாக்கி வைத்திருக்கிறார்கள். இதனால் அரசியல்வாதிகள் எந்தத் தவறையும் செய்யலாம் என்ற நிலையையும்; மதவாதிகள் எள்முனையளவு கூட எந்தத் தவறையும் செய்யக் கூடாது என்ற கண்டிப்பையும் சூழ்ச்சியாக

உருவாக்கி வைத்துச் சர்வாதிகார வாழ்வு வாழும் சதிகாரராகவே **பெரும்பாலான** அரசியல்வாதிகள் இருக்கிறார்கள்.

அதாவது **அரசியல்வாதி என்பவன் நாத்திகனாகத்தான் இருக்க வேண்டும்** என்ற ஓர் அவல நிலையை உருவாக்கி விட்டார்கள். ஏனென்றால் நாத்திகனாக இருப்பவன் எந்தத் தவறையும் செய்யலாம். அவனை எந்த ஆத்திகரும் தட்டிக் கேட்க முடியாது. எனவேதான், பெரும்பாலான அரசியல்வாதிகள் தங்களை வெளிப்படையாக ஒரு பத்தராக அல்லது ஆத்திகராகக் காட்டிக் கொள்ளாமல் வாழ்வதுதான் தங்களுக்குப் பாதுகாப்பு என்று எண்ணிடும் நிலை வளர்ந்து விட்டது.

இதனை எண்ணியாவது மதத் தலைவர்களும், கட்சிகளும், பிற நிறுவனங்களும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையுடனும், ஒருமைப்பாட்டுடனும் செயல்பட்டு மதத்துறையை அனைத்துத் துறைகளுக்கும் தலைமை தாங்கும் மேலான ஒன்றாக மாற்றிடல் வேண்டும். இல்லையேல் மதத் துறையில் வாழ்ந்து சென்றிடும் தனிப்பட்ட மதத் தலைவர்களும், கட்சித் தலைவர்களும், ஒருசில அருளாளர்களும் தனிமரங்களாகவே வாழ்ந்து சென்றிட நேரிடும். அதனால், அவர்களின் சாதனைகளும், போதனைகளும் கடலில் கரைத்த பெருங்காயம் போலாகிட நேரிடும். எனவே, மதத் துறையிலுள்ள சாதாரணப் பத்தர்கள் முதல் மிகப் பெரிய சித்திகளைப் பெற்ற அருளாளர்கள், தத்துவத் தலைவர்கள், தத்துவ நாயகர்கள், நிறுவன நிருவாகத் தலைவர்கள், ... முதலிய அனைவரும் ஒருவரை ஒருவர் மதித்துப் பொறுப்போடும், பொறுமையோடும் சந்தித்துப் பழகி கலந்து முடிவெடுத்திடல் வேண்டும். அப்பொழுதுதான் இவர்களால் மதத்திற்கும், மதத்தால் இவர்களுக்கும் நன்மைகள் விளைந்திடும்.

10. .... இவை போன்ற கருத்துக்களையும், சிந்தனைகளையும் அடிப்படையாகக் கொண்டு சிந்தித்தும், பிறரைச் சிந்திக்க வைத்தும் செயல்பட வேண்டியவராகவே இருக்கின்றார் இந்துவேத ஆச்சாறியார், தமிழின ஆச்சாறியார், ஞான ஆச்சாரியார், இந்து மதத் தந்தை,

குவலய குருபீடம், குருதேவர், அரசயோகி, அருளாட்சி நாயகம், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், இராசிவட்ட நிறைவுடையார், நிறையக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் என்று பரிந்துரை வழங்குகிருள் தேவதேவி அனாதிசத்தி, ஆதிசத்தி, அனாதி ஈசுவரி, ஆதி ஈசுவரி, சத்தியண்டத்து அருளாட்சிச் சத்தி. இதனைப் புரிந்தும் புரியவைத்தும் பொறுப்போடும் செயல்படுமாறு அனைத்து வகையான அடியான்களுக்கும், அடியாள்களுக்கும், அடியார்களுக்கும், ஆர்வலர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், உதவியாளர்களுக்கும், ஏந்தாளர்களுக்கும், விருப்பாளர்களுக்கும் அறிவிப்பு வழங்கப் படுகிறது.

ஒப்பம்

**அருளாட்சி நாயகம்,**
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**

**குருவாணை**
6/5/87

**தேவதேவியின் அருளாட்சிப் பரிந்துரை குருவாணையாக வழங்கப்படுகிறது.**

திருவோலை நாயகங்கள்:-

1) இ.ம.இ. தலைமைப் பொறுப்பாளர்: சி.கவிக்குமார்.
2) தலைமைப்பீடப் பணியாளர்களுள் ஒருவர்: சுந்தரானந்தன்.

**[உண்மை நகல்]**

நகல் நல்குபவர்:

கபாலீசுவரி சன்னிதானம், குருவழிவாரிசு, குருவின் பதிலி சித்தரடியார் சீ.மணி.

**// இதன் மூல நகல்: சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது. //**

# <u>பேரின்பமும் சிற்றின்பமும்</u>

"...... இந்தப் பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர்கள்; இம்மண்ணுலகின் முதல் மதமும், மூல மதமும், தாய் மதமுமான பதினெண்சித்தர்களின் சித்தர் நெறியான **சீவநெறி** எனப்படும் இந்து மதம் என்றென்றும் சிதைந்து, சீரழிந்து, சிக்கலுற்றுச் சின்னபின்னப் பட்டுக் கிடப்பதற்காக; அண்டபேரண்டமாளும் அருளுலக ஆட்சிமொழியான அமுதத் தமிழ்மொழியில் உள்ள <u>**'பேரின்பம்'** என்ற சொல் ஆணும் பெண்ணும் கூடி வாழும் இல்லற வாழ்க்கைக்கு உரியது</u> என்பதை மாற்றி; அச்சொல் மண், பெண், பொன் முதலியவற்றால் விளையக் கூடிய இன்பமனைத்தையும் இழித்துப் பழித்து ஒழிக்கும் தங்களுடைய வேத மதத்திற்குரிய துறவு வாழ்க்கைக்கு உரியதாக மாற்றி விட்டார்கள்.

இன்று சைவ சமயம் என்று போற்றப் படும் இந்து மதத்திற்குரிய இலக்கியங்கள், இலக்கணங்கள், நிகண்டுகள், சூத்திறங்கள், பூசாமொழிகள், பூசாவிதிகள், .... முதலிய அனைத்துமே மிகத் தெளிவாக **'பெண்ணின்பமே பேரின்பம்'** என்ற கருத்து விளக்கச் சொற்றொடரை வழங்கியும் கூட; அப்பாவித் தமிழர்கள் ஏமாந்தார்கள். இந்து மதத்தில் பெரும்பாலானவர்கள் பிருமணர்களை நம்பிக் கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய், அறிவிருந்தும் மூடராய் மாறி விட்டார்கள்! மாறி விட்டார்கள்! மாறி விட்டார்கள்! அந்தோ! அந்தோ! அந்தோ! என் செய்வேன்! ஏது செய்வேன்! ...."

என்று வருந்தி வருந்திப் புலம்பித் தமது குருபாரம்பரியத்தில் எழுதுகின்றார் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்.

**//குருதேவர் அறிக்கை எண்: 49//**

# <u>குரு - அரச - இலக்கிய பாரம்பரியங்களின் தத்துவம்</u>

பதினெண்சித்தர்கள் மேற்கண்ட மூன்று தலைப்புக்களில் அந்தந்தக் கால நிகழ்ச்சிகளைத் தொகுக்குமாறு ஏற்பாடு செய்துள்ளார்கள்.

பதினெண்சித்தர் பீடாதிபதிகள் மேற்கண்ட மூன்று தலைப்புக்களிலும் தங்களின் கருத்துக்களை வெளியிடுகிறார்கள்.

**<u>இம்மூன்று தலைப்புக்களுக்கும் உரிய தத்துவம்</u>**

‘<u>மாணுக்கர்கள்தான்</u> [தொண்டர்கள், பத்தர்கள், ...] குருவை நாடித் தேடியலைந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.’

**- குருபாரம்பரியத் தத்துவம்.**

‘<u>அரசன்தான்</u> [காவலன், மன்னன், வேந்தன், தலைவன்,...] மக்களை நாடிச் சென்று குறைகளையும், தேவைகளையும் ஆராய்ந்து உற்று அறிந்து ஆவண செய்து மக்களுக்குப் பயனுள்ளவனுக வாழ வேண்டும்.’

**- அரச பாரம்பரியத் தத்துவம்.**

‘கலைஞர்கள் மக்களைச் செம்மைப்படுத்தி மேம்படுத்தப் பயன்பட வேண்டும். மக்கள் கலைஞர்களை நலிந்து மெலிந்து நசித்துப் போகாமல் காத்திடப் பயன்பட வேண்டும்.’

**- இலக்கிய பாரம்பரியத் தத்துவம்.**

இத்தத்துவங்களுக்கு இலக்கியங்களாகவும், இலக்கணங்களாகவும் அமைவனவே பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் படைப்புக்கள்.

**//மூலம்: குருதேவர் அறிக்கை: 13//**

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்கள் (கி.பி.785 - கி.பி.1040) தாம் கட்டிய தஞ்சைப் பெரிய கோயிலில் தேவகுமாரரான இயேசுவுக்கும்; தேவதூதரான முகம்மது நபி அவர்களுக்கும் தனித்தனிக் கருவறைகள் அமைக்கத் திட்டமிட்டிருந்தார்.



இவர், தனது உலகச் சுற்றுப் பயணங்களில் தேவதூதரான முகம்மது நபி அவர்களின் சமாதியுள்ள மதினாவுக்கும், புனித தேவாலயம் உள்ள மெக்காவுக்கும், தேவகுமாரர் வாழ்ந்து செயல்பட்ட பாலஸ்தீன ஊர்களுக்கும் சென்று வழிபாடு செய்திட்டார். இப்படிச் சித்தர்கள் இறைவனின் குமாரரும், தூதரும், அடியாரும் உலகின் எப்பகுதியில் தோன்றினாலும் அவர்களை ஏற்றுப் போற்றி வழிபடும் பொதுவுடைமைப் போக்குடையவராகவே வாழ்ந்திருக்கின்றனர்.

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்களின் குருவாணைப்படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிரதி நூலகங்களில் எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிரதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.newsletters.gurudevar.org
Email: indhuism@gmail.com